
# கீறல்



வெளியீடு:

மின்னல்
வெளியீட்டகம்

இதழ் - 07



பொதுவாக இலக்கிய இதழ்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைதான் சில வருடங்களுக்கு முன்னர் கீறலின் 07வது இதழுக்கும் ஏற்பட்டது . 2015 ல் கவிஞர்களிடமிருந்து கவிதைகள் பெறப்பட்டு சஞ்சிகையின் பக்கங்களும் வடிவமைக்கப்பட்டு அச்சடிக்கத் தயாராக இருந்த நிலையில் அது வெளிவராமல் போனது. எனவே அதை அப்படியே விட்டுவிட மனம் இடம் கொடுக்காததால் அந்த இதழை 08 வது இதழோடு சேர்த்து 2020 ல் வெளியிடுகிறோம். இனிவரும் இதழ்களை தொடர்ச்சியாக கொண்டுவரும் பிரயத்தனங்களுடன் மீண்டும் களத்தில் பயணிக்கிறோம் உங்கள் நல்லாசிகளை வேண்டியவர்களாக.

அன்புடன்
பிரதம ஆசிரியர்
அஸீஸ் எம் பாயிஸ்

oluvilminnal@gmail.com
face book id : மின்னல் வெளியீட்டகம்

Govt.Regd No. DCA/06/04/01/AMP/046

# கீறல் –07


ஜூன் 2020

பிரதம ஆசிரியர் : கவிஞர் அஸீஸ் எம் பாயிஸ்

உதவி ஆசிரியர் : அஷ்ஷெய்க் Z.M. நிலாம் (நளீமி)

வெளியீடு : மின்னல் வெளியீட்டகம்

இல.59/2, பழைய தபாலக வீதி,

ஒலுவில் – 07 (கி.மா)

இலங்கை






+94776619949 / +94764888267

oluvilminnal@gmail.com

# உங்களுடன்...

**கவிதைப் பிரதிகள்**

| | |
|---|---|
| கண்ணீர் சாட்சியம் | - **மாத்தளை ஜெஸீமா ஹமீட்** |
| ஏற்க மறுக்கும் நிஜங்கள் | - **ஏ.எச்.எம்.றிழ்வான்** |
| தார்ரோட்டு அம்மியில | - **எம்.பி.எம்.பௌசான்** |
| கவிதைகள் | - **கே.எல்.நப்லா** |
| மரண பயம் | - **சாய்ந்தமருது ஏ.எம்.றொஸான்** |
| நிம்மதிக்கான தேடல் | - **இறக்காமம் பர்ஸானா றியாஸ்** |
| விதவை | - **எம்.ஏ அஷ்ரப் ஹான்** |
| முதுமை | - **கிராமத்தான் கலீபா** |
| தாகம் தீர்த்த குருவி | - **பிரகாசக்கவி** |
| மரணத்தின் குரல் | - **ஒலுவில் எம்.எச்.ஹஸ்றி** |
| நிராகரிப்பிற்கான ஒற்றைச் சொல் | - **அஸீஸ் எம் பாயில்** |
| எங்கிருந்தும் தொடங்கமுடியாத தெரு | - **றொஷான் ஏ. ஜிப்ரி** |
| பூமிப் பெண் | - **மருதமுனை எம்.எம்.நௌபல்** |
| பெண் | - **ஒலுவில் மாஹீர்** |
| நாளைய கோஷம் | - **மருதமுனை விஜிலி** |
| புது யுகம் படைப்போம் | - **ஒலுவில் அப்துல் நழீம்** |
| **இருள்** | – இஷட் எம் நிலாம் |

**கட்டுரைப் பிரதிகள்**

| | |
|---|---|
| சாளரம் | - **கலாநிதி எஸ். எம். அய்யூப்** |
| கீறல் –06 மீதான பார்வை | - **மருதமுனை விஜிலி** |

# கண்ணீர் சாட்சியம்

மலையகத் தமிழருவி
மாத்தளை ஜெஸீமா ஹமீட்

ஹறாமை விட்டு ஹலாலுக்கு வழிகாட்ட
எத்தனை பயான்கள்…
கருப்புப் பணமாய் கைமாறும்
இந்த சீதனம் ஹலாலா ஹறாமா…?

ஆடையில் கூட
அந்நியரை ஒத்திருக்க வேண்டாமென்று
அண்ணல் நபி வாக்கிருக்க
சீதனமென்பதும் பிறர் சம்பிரதாயமென்பதை
நாம் உணர்வதெப்போது…?

தொழுகை நோன்பை
பயபக்தியாயெண்ணும் நீங்கள்
கைக்கூலி என்றால் மட்டும்
சளைக்காமல் ஓடுவதன்
சங்கதிதான் என்ன…?

ஒரு வேளை உணவுக்கே
உழைத்துக் களைத்துப் போன
எங்கள் வாப்பாவிடம்
உங்கள் மகன்களுக்காகவும்
சொத்துச் சேர்க்க
இனியுமில்லை உடலில் பலம்

கையிரண்டின் உழைப்பே
மிகச் சிறந்ததென்ற கருத்திருக்க
பிடுங்கித்தின்னும் உங்கள்
சோம்பேறித்தனத்தை
என்னவென்று மெச்சுவது…?

காசுக்குத்தான் இந்த வாழ்க்கையென்றால்
நாம் அதனை வாங்க வேண்டாம்



மலிந்தால் சந்தைக்கு வருவது போல்
இந்த மாப்பிள்ளைகளும் விலை
குறையட்டும்
அதுவரை நம் வயதுகள்
வளர்ந்து போனாலும் கவலையில்லை…

பணம் கொடுத்தால் பொருள் கிடைக்கும்
ஒன்றுமே கொடுக்காதவனுக்கும்
பொன்னோடு பெண்ணும் கிடைக்கும்
விசித்திரம்
கல்யாணச் சந்தையில் மட்டுமே உண்டு…

மஹர் கொடுத்து மணம் முடிப்பதுதான்
மார்க்கம் ஆனால்
எடுத்ததிலிருந்து கொடுப்பதுதான்
இப்போதைய நாகரீகமோ…?

காசு திரட்டியே கூன் தட்டிப்போன
கடந்த கால வாப்பாக்களுக்காகவும்
கொஞ்சம் கவலைப்படுங்கள்
எதிர்கால வாப்பாக்களே
உங்கள் நிமிர்வெல்லாம்
குனிவதற்கே….

ஏவல் விலக்கலில்
ஏந்தல் வழி நடக்கும் நீங்கள்
இந்தச் சீதனச் சாக்கடையை
யார் சொல்லித் திறந்தீர்கள்…?
கன்னியர் வாழ்வதை கரியாக்கும்
ஆண்களே கவனம் !
உங்களை நரகின்பால் நகர்த்திவிட
எங்கள் கண்ணீரே
சாட்சியாகிட கூடும்….!

# ஏற்க மறுக்கும் நிஜங்கள்

ஏ.எச்.எம் ரிழ்வான்

மகனே
என் கருவறை இட்ட பிச்சை நீ
இன்று
என் வயிற்றறையை நிரப்ப
என்னைப் பிச்சை எடுக்க விட்டாய்

உனை ஈன்றெடுக்க
உடலில் உதிரம் கொட்ட
அழுதவள் நான்
உன் வீட்டிலிருந்து என்னை
துரத்துகிறாய் உள்ளம்
உதிரம் கொட்டி அழுகிறது.

குழந்தையாய் நீயிருக்க
அசிங்கப்படுத்திய ஆடைதான்
எத்தனை
சலிக்காமல் துவைத்தேன் நான்
நீயோ முகம் சுளித்து
கிழிந்து இத்துப் போன புடவையை –
என்
முகத்தில் எறிந்து விரட்டுகிறாய்

மொட்டை மாடியிலே
அழகிய நிலவொளியில் – என்
மடியினில் உனை வைத்து நீருசிக்க
ரசித்து ரசித்து உணவூட்டினேன்
இன்று
நானோ வீடுகளில் கொடுக்கும் சொற்ப
உணவை
கையேந்தி வாங்கி உண்கிறேன்

என் செல்வமகனே! அன்று
உன்னை நான் வெயில் காற்று
பனி மழையில் பாதுகாத்தேன்
இன்று நான்
துன்பப் புயலில் சிக்கி
பரிதவிக்கிறேன்

கல்விக் கரையை நீ கடக்க
கவலைப்பட்டு கண்ணீர் வடித்து
கஷ்டப்பட்டு கற்பித்தேன் – நீ
கரம்பிடித்தவளின் கட்டளையினாலே
கண்ணீர் சிந்துகிறேன் நான் இன்று



பாடசாலை விட்டு நீ வர
பாதையோரமாய் கால் வலிக்க
காத்திருந்தேன் – இன்றோ
உன்னைத் தேடி நான் வர
கடுகடுத்தவனாய்
கடிந்து விரட்டுகிறாய்
என்னை

அருமை மகனே...!
நீ இருக்க நான்
கருவறை தந்தேன்
நான் இருக்க – ஒரு
இருட்டறையாவது தருவாயா
உன்வீட்டில்

# தார்ரோட்டு அம்மியில...

எம்.பி.எம். பௌசான்



தார்ரோட்டு அம்மியில
உன்
தலையை வைத்து
தட்டியது யார்?
பஸ் வண்டிக் குழவியா?

கண்ணுரெண்டும் வெளியாகி
மண்டோடும் மண்ணாகி
இரத்தம் கசிகிறதே...
காக்கைச் சொண்டில்
குடல் நீள்கிறதே...

உன் குட்டிகளின்
குடலொட்டிய பசி போக்க
இரை தேடி வந்தீரோ...?

வஞ்சம் தனை தீர்க்க
சீறித் தன்னினத்தை
துரத்தித்தான் வந்தீரோ...?

அப்பாவித் துணையொன்றை
தப்பாக
அறைந்தறைந்து தாக்கிவிட்டு
ஆணவத்தில் வந்தீரோ...?

உணர்வோங்கி விரும்பிணையா
தன்னிணையை
தன்பாட்டில் வன்புணர்ந்து
தலைகனத்து வந்தீரோ...?
அற்பப் பிராணியாய்
அப்பிக் கிடக்கின்ற பூனையே...!

மீண்டும் வராதா
அந்த பஸ்வண்டிக் குழவி
சீழ் தலை மறைத்து
கிப்பி சிலிப்பிய
இவர்களையும்
தட்டியரைக்க..!

20.03.2013

# சாளரம்

**கலாநிதி எஸ். எம். அய்யூப்**

ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூவை தமிழ்ச் சூழலில் அறிமுகப்படுத்தியவராக கவிக்கோ அப்துர்ரஹ்மான் கொள்ளப்படுகின்றார். இலங்கைப் பரப்புக்குள் ஹைக்கூவை இழுத்து வந்தவர்களுள் அஸீஸ் எம் பாயிஸூம் முக்கியமானவர். அவரது "உயிர்ச்சிறகுகள்" நூல் "ஹைக்கூ" வடிவில் அமைந்த ஏராளமான கவிதைகளையும் ஹைக்கூவை ஒத்த "சென்ரியூ" வடிவக் கவிதைகள் சிலவற்றையும் கொண்டிருக்கின்றன.

பாயிஸைப் போலவே அவரது ஹைக்கூ கவிதைகளும் மென்மையானவை; கனதியானவை; ஈர்ப்பு சக்தி கொண்டவை.

கொள்ளையடிக்கச் சென்றவன் அவசரத்தில் கைக்குச் சிக்கியவற்றையெல்லாம் பற்றிக்கொண்டு ஓடுவது மாதிரி அல்லாமல், கொரோனாவுக்கு பயந்த ஒரு குடியானவன் போல அவதானமாக நின்று நிதானித்து "உயிர்ச்சிறகுகள்" நூலிலிருந்து தேர்ந்தெடுத்த நான்கு ஹைக்கூ கவிதைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். ஒப்பீடு எனும் சாளரம் வழி எட்டிப் பார்த்தபோது கிடைக்கப்பெற்ற அரிய தரிசனங்களே இவை.

ஹைக்கூவின் வேலையே கடைசிவரியில் கண்திறப்பதுதான். இத்தரிசனங்களும் உங்கள் கண்களை மட்டுமல்ல முழு புலன்களையும் புத்தெழுச்சிபெறச் செய்துவிடும்.

**"செம்மறி ஆடுகள்**
**மேய்ப்பவர் யாருமில்லையே**
**வானில் மேகக்கூட்டம்"**



இங்கு மேகக் கூட்டங்கள் செம்மறி ஆடுகளுக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றன.
உண்மையில் மேகக் கூட்டங்கள் என்பது
ஆகாயத்தில் உலவும் செம்மறி ஆடுகளே!
செம்மறி ஆடுகள் என்பவை தரையில் மேயும் மேகங்களே!

மேகக் கூட்டங்களுக்கும், செம்மறி ஆடுகளுக்கும்
பல பொருத்தப்பாடுகள் உள்ளன.

மேகங்கள் ஓடுகின்றன.
செம்மறி ஆடுகளும் ஓடுகின்றன.

செம்மறி ஆடுகள் கனைத்துக் கனைத்து சப்தம் எழுப்புகின்றன.
மேகங்கள் இடி இடித்து வானில் வெடிக்கின்றன.

செம்மறி ஆடுகள் சிறுநீர் கழித்து நனைக்கின்றன.
மேகங்கள் மழை பொழிந்து ஈரமாக்குகின்றன.

செம்மறி ஆட்டின் பிழுக்கையும் மேகத்தின் மழைத் துளியும்
பயிர் பச்சைகளை செழிப்பாக்கி புன்னகைக்க வைக்கின்றன.

செம்மறி ஆட்டின் கண்கள் ஒளிபட்டால் மின்னுகின்றன.
மேகத்தின் கண்களும் மின்னல் எனும் ஒளிபட்டால் மின்னுகின்றன.

ஆட்டை ஓட்டி ஓட்டி மேய்ப்பவன் இடையன்.
மேகத்தை ஓட்டி மழை தருபவன் இறைவன்.

இரு மேகங்கள் சேரும்போது இடியும் மின்னலும் ஜொலிக்கின்றன.
பெட்டையும், கடாவும் புணரும்போது கருவும் குட்டியும் ஜனிக்கின்றன.

வறண்ட மேகங்கள் மழை நீரைப் பாய்ச்சுவதில்லை
ஆண் ஆடுகள் பாலைப் பீய்ச்சுவதில்லை.

மேகத்தின் வயிறு மழையால் நிரம்பும்போது துளித்துளியாய்
பூமியை நோக்கிப் புறப்படுகின்றது.
ஆட்டின் வயிறு புல்லால் நிரம்பும்போது பொடி நடையாய்

வீடு நோக்கித் திரும்புகின்றது.
ஆட்டிற்குப் பல நிறங்கள்.
மேகத்திற்கும் பல வர்ணங்கள்.

மேகத்தின் காம்புகளில் மழை வழிகின்றது.
ஆட்டின் காம்புகளில் பால் சுரக்கின்றது.

பூமியிலிருந்து உறிஞ்சிய நீர் மீண்டும் மழையாக
கொட்டுகின்றது மேகத்திலிருந்து.
பூமியிலிருந்து மேய்ந்த புற்கள் மீண்டும் பாலாக
சொட்டுகின்றது ஆட்டிலிருந்து.

மேகம் சூட்டைத் தணிக்கிறது மழையைப் பொழிந்து.
செம்மறி ஆடு சூட்டைக் கொடுக்கின்றது கம்பளி ஆடை கொடுத்து.

நபியவர்கள்
ஆட்டைப் பிடித்தார்கள் இடையனாக இருந்தபோது.
மேகத்தைக் கடந்தார்கள் விண்யாத்திரை சென்றபோது.

ஆடும் மேகமும் நபிகளாரின் பாதச் சுவடுகளோடு தொடர்புபடுகின்றன.
ஹிஜ்ரத் சென்ற போது நபிகளாரின் பாதச் சுவடுகளை ஆடுகள் அழித்தன.
பத்ரு களத்தில் மேகங்கள் மழைபொழிந்து
மணல் மண்ணை கெட்டியாக்கி நபிகளாரின் பாதங்கள் உறுதியாக நிற்க உறுதுணை செய்தன.

●

**“ஐயோ! பகல் கொள்ளை**
**யாரும் தடுக்கவில்லையே…**
**சீனி மூட்டையில் எறும்பு”**



இங்கே எறும்பு கொள்ளையடிக்கும் வேலையில் இறங்கி
கொள்ளையர்களில் ஒருவனாக மாறியிருக்கிறது.

பூனையின் கால்களைப் பூட்டிக்கொண்டு சத்தமில்லாமல் பதுங்குவார்கள் கொள்ளையர்கள்.
எறும்பு ஊர்ந்து வரும் காலடிச் சத்தங்களும் காதுகளுக்குக் கேட்பதில்லை.

கொள்ளையிடப்படும் பொருட்கள்
எறும்பிற்கும் கொள்ளையர்களுக்கும் சொந்தமில்லை.

மாட்டிக்கொண்டால் கொள்ளையர்களுக்கு சிறை.
எறும்பிற்கு மலத்தியன்.

புற்றுக்குள் ஒளிந்துகொள்கின்றது எறும்பு.
மறைவான இடங்களில் பதுங்கிக்கொள்கின்றார்கள் கொள்ளையர்கள்.

எறும்புகளுக்குத் தனியான மொழியுண்டு.
கொள்ளையர்களுக்கு தனியான இரகசிய மொழியுண்டு.

சுரங்கம் அறுப்பது எறும்புகளுக்கும்
கொள்ளையர்களுக்கும் கைவந்த கலை.

மனிதர்களின் பொருட்களை எறும்புகள் கொள்ளையடிக்கின்றன.
எறும்பின் பொருட்களைக் கொள்ளையடிக்கும்
மனிதர்களும் இருக்கின்றார்கள்.
எறும்புகள் புற்றிலே சேர்த்து வைத்திருக்கும் தானியங்களை
பஞ்ச காலத்தில் கொள்ளையிட்டு உணவு சமைக்கின்றார்கள்
சில ஆபிரிக்கப் பழங்குடிகள்.

கொள்ளையிடுவது தப்பு என்று தெரியாமல் செய்கின்றது எறும்பு.
கொள்ளையிடுவது தண்டனைக்குரிய குற்றம் என்று
தெரிந்தும் செய்கின்றார்கள் கொள்ளையர்கள்.

தன்னைக் காப்பாற்றிக்கொள்ள
கடித்துவிடுவார்கள் இருவரும்.

●

**“தொடர்வாக்கியம்
வான வீதியில் அழகிய அதிசயம்
கடல் காக்கைகள்”**



வான வீதியில் தொடராக அணிவகுத்துப் பறக்கும் கடல் காக்கைகள் தொடர் வாக்கியமாய்த் தோன்றுகின்றது கவிஞருக்கு.

வாக்கியம் மொழியில் சேருகின்றது.
கடல் காக்கை பறவையில் சேருகின்றது.
இந்த ஹைக்கூ மொழியையும் பறவையையும் தொடர்புபடுத்திப் பேசுகின்றது.

பறவைகள் பல வகை.
மொழிகளும் பல வகை.

முட்டை, குஞ்சு, பறவை எனப் பறவையின் வாழ்க்கை வட்டம் அமைகின்றது.
எழுத்து, சொல், வாக்கியம் என மொழியின் அமைப்பு நீள்கின்றது.

உணவூட்டாத பறவைகள் இறக்கின்றன.
பாவனையில் இல்லாத மொழிகளும் இறக்கின்றன.

பறவைக்கு இரு சிறகுகள் உள்ளன.
எழுத்தும், பேச்சும் மொழியின் இரு சிறகுகள்.

அழகிய மொழியும், வாக்கியமும் கேட்போரை வசீகரிக்கின்றன.
வர்ணப் பறவைகளும் அதன் அசைவுகளும்
பார்ப்போரை மந்திரித்து விடுகின்றன.

பறவைகளினால் கொத்தவும் முடியும்
நகங்களால் கிழிக்கவும் முடியும்.
மொழியினால் ஏசவும் முடியும் தூஷணம் பாடி கீறிக் கிழிக்கவும் முடியும்.

பறவைக்கு நடனம்.
மொழிக்கு இசை.

கூண்டின் கதவை மூடிவிட்டால்
பறவையினால் வெளியே வர முடியாது.
மக்கள் வாயை மூடிவிட்டடால்
வார்த்தையினால் வெளியே வர முடியாது.

பறவையின் சங்கீதத்தை
இசைக்கருவிகள் மூலம் வெளிப்படுத்த விரும்புகின்றான் மனிதன்.
மனிதனின் பேச்சை தன் குரலால் வெளிப்படுத்த முனைகின்றன
கிளியும், மைனாவும்.

மொழியையும், பறவையையும் இறைவனே படைத்தான்.
அவனே நேர்வழியை வஹி மூலம் மனிதனுக்கு அறிவித்தான்.
உள்ளுணர்வு (Instincts) மூலம் பறவைக்கு உணர்த்தினான்.

●



**“ஈக்கில் மெத்தை
மௌனமாய் உறங்கியது ஒரு ஹைக்கூ
கூட்டில் மூன்று முட்டை”**

ஒரு கூட்டில் இருக்கும் மூன்று முட்டைகளை
ஹைக்கூவிற்கு ஒப்பிடப்படுகின்றார் கவிஞர் இங்கு.
ஏனெனில் ஹைக்கூவும் மூன்று வரிகள்தான்.

ஹைக்கூ: கவியை வைத்திருக்கும் சட்டம்.
முட்டை: உயிரை வைத்திருக்கும் சட்டம்.

ஓடுகள் வெடிக்க புத்தம்புதிய உயிர்கள் சிறகடிக்கும்.
தளைகள் தெறிக்க புதுக் கவிதைகள் உருவெடுக்கும்.

முட்டை வெளிவரும்போது பட்சிக்கு வலிக்கும்.
கவிதை பிறக்கும்போது கவிஞனுக்கு வலிக்கும்.

முட்டை என்பது தாய்மையின் அடையாளம்.
கவிதை என்பது கவிஞனுக்கான அடையாளம்.

முட்டை என்பது ஒரு வகைக் கோளம். அது ஓர் உலகம்.
கவிதையும் ஓர் உலகம். அதிசயமான உலகம்.

ஒவ்வொரு முட்டைக்குள்ளும் உயிரின் கரு இருக்கும்.
ஒவ்வொரு கவிதைக்குள்ளும் கவிஞனின் ஆன்மா கொஞ்சம் கலந்திருக்கும்.

முட்டையுள்ள உணவு சிறப்புப் பெறும்.
கவிதையுள்ள அரங்கும் களைகட்டும்.

சில பறவைகள் நாளாந்தம் முட்டை இடும்.
சில பறவைகள் இடை இடையே முட்டை இடும்.
வேறு சில பறவைகள் ஆண்டிற்கொரு முறை முட்டை இடும்.
ஆமை சொல்லாமல்கொள்ளாமல் ஆயிரக்கணக்கில் முட்டை இடும்.

கவிஞர்களும் அப்படித்தான்.
சிலர் அடிக்கடி எழுதுவார்கள்.
இன்னும் சிலர் இடையிடையே எழுதுவார்கள்.
ஆண்டுக்கு ஒருமுறை பேனை பிடிப்போரும் உண்டு.
ஆயிரக் கணக்கில் கவி எழுதும் படைப்பாளிகளும் உள்ளனர்.

சுவைப்பதற்கும் விற்பனைசெய்வதற்கும் மட்டும் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுவதில்லை.
கவிதையும் அப்படித்தான் கவிதை மூலம் உயிர்ப்புள்ள சமுதாயம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

கோழி ஒரு முட்டைக்கு ஊரைக் கூட்டும்.
ஆமை ஆயிரம் முட்டையிட்ட பின்பும் அமைதிகாக்கும்.
ஒரு கவிதை எழுதிவிட்டு ஊரைக் கூட்டுபவர்களும் உண்டு.
ஆயிரம் கவிதைகளை எழுதிய பின்னும் அடக்கமாக இருப்பவர்களும் உண்டு.
முட்டையிட்டு குஞ்சு பொரிக்க தன் சொண்டினால் கொத்திக்கொத்தி
அடுத்த பறவைகளுக்கு வீடு செய்கிறது மரங்கொத்தி.
சில கவிஞர்களும் அப்படித்தான் அடுத்தவர் கவிதைகள் பிரசுமாக பாதை செய்து கொடுக்கிறார்கள்.

முட்டையின் முனையும் கவிஞனின் பேனாவும்

கூர்மையானவை.

முட்டையை அவிக்கலாம்; பொரிக்கலாம்.

கவிதையை வாசிக்கலாம்; பாடலாம்.

பெரும்பாலான முட்டைகள் வெண்மையானவை.
கவிஞர்களின் உள்ளங்களும் அப்படித்தான்.

முட்டையைப் போலவே கவிஞர்களும் மென்மையானவர்கள்.
கவனமாகக் கையாள வேண்டும், இல்லாவிட்டால் நொறுங்கிவிடுவார்கள்.

குஞ்சாக மாறாமல் நாற்றமெடுக்கும்
கூழ் முட்டைகளும் உண்டு
கவிதைகளும் உண்டு.

ஒரு விளக்கு தன்னால் முடிந்தவரை வெளிச்சத்தைப் பாய்ச்சி தன் எல்லைக்குள் இருந்து தலைகாட்டியவற்றை இங்கே கொண்டு வந்திருக்கின்றது. ஆனால் இருட்டுக்குள் ஒளிந்துகொண்டு தலைகாட்டாமல் இன்னும் எத்தனையோ அம்சங்கள் உலவித் திரிகின்றன. ஒரு இராட்சத விளக்கைக் கொண்டுவந்தால் இன்னும் புதிய புதிய எல்லைகளை துலங்கவைக்க முடியும.

# இருள்

**இஷட் எம் நிலாம்**

இருளைக் கண்டு விரண்டோடும்
மனிதா..
இருளை வெறுத்திருந்தால் இஸ்லாம்
உலகிற்கு கிடைத்திருக்காது.
ஹிராவின் இருள்தான்
உன் வாழ்க்கைக்கு
ஒளி பாய்ச்சியது.

சிந்தனையின் ஊற்றுக் கண்ணே
இந்த இருள்தான்.
இருளில்தான் சிந்தனைகள்
பிறக்கின்றன.
மானிடா உன் பிறப்பின்
ரகசியமே
இருளுக்குள்தான் நடந்திருக்கிறது.

பெண் கூந்தல் இருளானது
என்பதால்தான் இஸ்லாம் அதனை
மறைக்கக் கூறியுள்ளது.

மனிதனின் இருளுக்குத்தான் மதிப்பும்
கவர்ச்சியும்.
மறைக்கப்படுபவைதான்
மதிப்பானவை.
நிலவின் பால் வெள்ளம்
இரவில்தான் படிகிறது.
நிலவுக்கு பரிமாணமே
இருள்தான்.

இருளை உருவாக்க
முடியாது.
ஒளிதான் உருவாக்கப்படுகிறது.
ஏனெனில்
உலகின் அடிப்படையே
இருள்தான்.

அடிப்படையே நிரந்தரமானது.
உருவாக்கப்படுவது அழிந்தேவிடும்.
பூமியின் ஒரு பக்கம் மட்டுமே ஒளி.
அண்டம் முழுக்க வியாபித்திருப்பது
இருளே..!

இருள்தான் ஆன்மீகம்
இறைவனை அடியான் நெருங்குகிற
நேரமே நடுநிசிதான்.
இருள்தான் அறிவு
வெளிச்சம் அனைப் படித்துப் பார்க்க
உதவுகிறது.
ஒளி அழகு பெறுவது
இருள் என்ற பாத்திரத்திலேயே..!

இருள்தான் தம்பதியினரின்
மானங்காக்கும் ஆடையாகிறது.
இருளே இல்லையென்றிருந்தால்
உலகில் எவனுமே பெண்களை
விரும்பியிருக்கவே மாட்டான்.

இருளே அத்தியவசியம்
வெளிச்சமல்ல.
எனவேதான் ஒளி இடைநடுவில்
நின்று போகிறது.
இருளோ நித்தியமாகி
வியாபிக்கின்றது.

# கே.எல். நப்லாவின் கவிதைகள்



01.
காற்றைப் பிடித்துக் கேட்கும்
குழந்தையிடம்
பொலித்தீன் பைக்குள் அடைத்துக்
கொடுக்கிறேன்
மூச்சு முட்டி காற்று இறந்து போவது
தான்
குழந்தைக்கு மிகப்பிடித்தமான
விளையாட்டானது

02.
கைகள் இரண்டுக்குள்
கடலை அள்ளிக்கொண்டேன்.
அடம்பிடித்தபடி
விரல் இடுக்கு வழியே
வழிந்தோடுகின்றன
அலைக்குஞ்சுகள்

03.
இன்று
காலையிலும் காற்று
கதவைத்தட்டியது
முதல் வரியில் காற்று உள்ளே
இருந்திருக்க வேண்டும்
என்று எழுதினேன்
அடுத்தடுத்த வரிகளில் தான்
அது பறந்திருக்க வேண்டும்
காற்று காத்திருந்த போது நான்
கவிதை எழுதுவதில் இருந்தேன் ..

04
இரவு முழுக்க
எண்ணிக்கொண்டிருந்தேன்
எத்தனை நட்சத்திரங்களுக்கு
நிலவு அந்தஸ்த்து
கொடுக்கலாமென்று

05.
விடியலைத்திருடி
தலையணைக்குள்
வைத்துக்கொண்டது தூக்கம்
விடியவில்லை விடியவில்லை
என்று
தாலாட்டிக்கொண்டிருக்கிறது கனவு

# மரண பயணம்

ஆ.முகம்மது றொசான்
சாய்ந்தமருது.



பகல் உணவை என்றும் போல்
மனைவியிடமிருந்து வாங்கி
மனைவி மக்கள் முகத்தை
இறுதியாய் பார்த்தபடி
கடற்கரைக்கு செல்கிறான்
மீனவன்

ஓசையெழ படகை நகர்த்தி
ஆரம்பிக்கின்றான்
தனது மரணப் பயணத்தை

யாரும் இல்லை
தானும் இன்னொருவனும்
மரண நண்பர்களாய்
காய்ந்த முகத்துடன் அலையின்
மேலே

பொழுது சாய்கிறது
மனைவி ஆசையுடன்
சமைத்துத் தந்த
உணவை அலையின் படகின்
ஆட்டத்துடன்
இறுதியுணவாய்யெண்ணி
உண்டு முடிக்கின்றான்

வலையை நீருக்குள் போடுகையில்
வீடு போய்ச்சேர உயிர்
இருக்குமென்ற அவநம்பிக்கை
மனதில்...

விடிய விடிய கண்விழித்து
சுன்னத்து மாப்பிள்ளைக்கு
காவல் இருப்பதுபோல்
அங்கும் இங்கும் பார்த்தபடி
அவன் இரவுகள்

அல்லாஹ்வை முன்நிறுத்தி
தொழுகையும் அதற்குள்ளே
நட்சத்திர நேரசூசி பார்த்து
பொழுது விடியும் போது
அவன் மனசுக்குள் நம்பிக்கையும்
ஒளிக்கதிர்களாய் விரிந்தன

வலையை படகில் ஏற்றி
மீன்கள் நிறைந்த மடியுடன்
கரையை நோக்கி திரும்பியது
அவன் படகு

மரணம் இன்றைக்கு இல்லை
இன்னொரு நாளைக்கென்று
மரணத்தின் பயணதுணை
நண்பனிடம் சொன்னபடி...

# நிம்மதிக்கான தேடல்

இறக்காமம் பர்ஸானா றியாஸ்



என் பேரனுக்கும்
நிலவைக் காட்டி
சோறூட்ட ஆசைதான்,
நான் என் மகளுக்கு
ஊட்டியதைப்போல

அதற்கு
என் வீட்டில்
ஒரு சிறிய முற்றமாவது
இருக்க வேண்டும்

முற்றங்கள் காணாமல் போய்
வெகுநாளாயிற்று
அயலிலுள்ள வீடுகளிலும்
கோடி கொடுத்தாலும்
பெறுவதற்கு ஒரு முற்றமில்லை

நிலவும் ஏங்கிப்போய் கிடக்கிறது
காணாமல்போன முற்றங்களை
எண்ணி

என் நண்பியிடம்தான்
சொல்லியிருந்தேன்,
நான் நிலவைச் சந்தித்து
ஆறுதல் சொல்லிவிட்டு
திரும்பவிருக்கும் சேதியை

அதை கேள்வியுற்று
பலர் சாரை சாரையாகத்
திரண்டு வருகின்றார்கள்
என்னுடன் அவர்களுமாக

அனைவரின் முகத்திலும்
நிம்மதிக்கான தேடலும்
கைகளில்
ஒவ்வொரு பன் பாயும் இருந்தது

# விதவை

முஹம்மது ஆரிப் அஸ்ரஃப் ஹான்
பாலத்தோப்பூர் -தோப்பூர்



வண்ணங்கள் கலைந்த
பின்னரும் வாழத்
துடிக்கின்ற ஒரு இளம்
வண்ணத்துப்பூச்சி
"இவள் "

மஹர்கொடுத்து
மனைவியாக்கிவன்
பட்டுப்போனதால்
வர்ணங்கள் எல்லாம்
கெட்டுப்போன வெளிர்
வானவில்...
"இவள் "

காமக் கண் கொண்டு
இச்சை ஊளையிடும்
நரிகளுக்கு...
உஷ்ணமேற்றி விழிகொண்டு
உலை வைத்து எரிக்கின்ற
வித்தையறியா
பாவப்பிறவி
"இவள் "

சுற்றத்தார்
பாடுகின்ற வசைகளை
இனிமையான இசையென
ரசிக்க கற்றுக் கொண்ட
ரசிகை...
"இவள் "

விதவை என்னும்
பட்டத்தை நூலில் ஏற்றி
வாழ்க்கை என்ற
இருண்ட வானிலே
பறக்கவிட துடிக்கும்
அதிசய தேவதை
"இவள் "

உளி தொலைந்த
பின்னும் அவனது உருவை
தினமும் கண்ணீரில்
கரையும் உயிரில்
சிற்பமாய் வடிக்கின்ற
உன்னத சிற்பி
"இவள் "

# முதுமை

கிராமத்தான் கலீபா



வெள்ளை இழையொன்று
வெட்கித்து நிற்குதென்று
சவரக் கத்திக்காரன்
சாடையிலே சொல்லுகின்றான்

பிடித்திழுத்த(து) பெரிதில்லை
கண்முன் காட்டிய பெருவலிதான்...
கடைக்காரன் நகைக்கின்றான் !
கண்ணாடி பழிக்கிறது.

உயிரணுக்கள் உறைந்துவிட
உள்ளுணர்வு சங்கூத
வயதான விஷயத்தை
"பாபர்தான்" சொல்லுகிறான்...

அங்கங்கே நரைவந்து
அவையாளப் பார்க்கிறது
இன்றோடு இளமையினை
எதிர்ச்சொல்லே ஆள்கிறது!



# தாகம் தீர்த்த குருவிகள்



பிரகாசக்கவி

வற்றிய குளம் ஒன்றின்
அருகில் நின்று
எருமைகள்
அழுதுகொண்டு நின்றன...
காரணம் அறிந்ததும்
நீராட வந்த யானைகளுக்கு
ஒரே ஆச்சரியம் !
அவைகளின் காதுகளை
அவைகளாலேயே நம்ப
முடியவில்லை
மீண்டும்
தவளைகள் வேறு
தலையாட்டி தொலைத்தன,
மீன்களும் அங்கில்லை.
சினம் கொண்ட அந்த யானைகள்
மூர்ச்சையாகி
மல்லாந்துகிடந்த முதலைகளை
மிதித்து கேட்டபோதுதான்
அவைகளுக்கு ஞானம் பிறந்தது
தாகமெடுத்த பல குருவிகள்
சேர்ந்து குடித்தால்
குளமென்ன
கடலும் வற்றிப்போகுமென்று !

# கீறல் –06 பற்றியதான ஒரு குறிப்பு

கவிஞர் மருதமுனை விஜிலி




கலை இலக்கிய சஞ்சிகைகளின் வாழ்வியல் மீதான கால அளவீடு குறைவானதாக இருந்தாலும் அதற்கு பெறுமானம் கனதிதான். சஞ்சிகைகளின் பக்கம் வாசகர்கள் ஈர்ப்புக் கொள்வதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1. ஆரம்ப எழுத்தாளர்களுக்கான ஒரு களம்
2. ஒரே பார்வையில் ஒட்டுமொத்தமான ரசனை
3. படைப்புக்களை பட்டைதீட்டும் பயில்களம்

சஞ்சிகைகள் குறித்து இவ்வாறு கட்டுமானம் இருந்தாலும் நமது மண்ணைப் பொறுத்த மட்டில் பல சஞ்சிகைள் கால ஓட்டத்தின் ஊடே தன் முகத்தை மறைத்துக் கொள்வதுமுண்டு. கல்முனையிலிருந்து ‘‘வியூகம்’’, அக்கரைப்பற்றில் இருந்து ‘‘பெருவெளி’’, மருதமுனையிலிருந்து ‘‘முனைப்பு’’ தொலைதூர தேசத்தில் இருந்து ‘‘ஞானம்’’, ‘‘மல்லிகை’’, ‘‘பூங்கா’’, ‘‘படி’’ என்பனவும் தன் இருப்பை அவ்வப்போது தக்க வைத்துக் கொள்ளும்.

இவைகளுக்கப்பால் கவிஞர் அஸீஸ் எம் பாயிஸ் அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ‘‘கீறல்’’ ற்கு பிரத்தியேக இடமுண்டு. முன்புகளில் வெளிக் கொணரப்பட்ட 05 கீறல்களிலும் காத்திரமான பல பதிவுகள் இடம்பெற்றன. அதிலுள்ள படைப்புக்கள் நீண்டகாலம் கருத்தாடலுக்கு உட்பட்டன. இதுபோலவே தற்போது 06 ஆவது பிரசவமாய் கீறல் புறப்பட்டுள்ளது.

உள்நுழைந்து புரட்டும் போது சற்று சிந்திக்க வைக்கிறது. கவிதைகளின் உள்ளார்ந்த உணர்வு, பாடுபொருளின் பெறுமான வீச்சு, கவி புனைவு, செயற்பாட்டாளர்களின் வித்தியாசமான பார்வை என்பன கீறலை வாசிக்க வைக்கின்றன. கவிஞர் அஷ்ர.்.ப் சிஹாப்தீனின் : முழுக்க முழுக்க கவிதைகளுக்கான இதழாக தலை காட்டிய ‘‘யாத்ரா’’ வைப்போல கவிஞர் பாயிஸூம் சற்று விலகி இதனையும் கவிதைகளுக்கான இதழாக தவழவிட்டிருக்கின்றார்.

“காயம் வரக் கீறத் தெரிந்த அனைவரும் எம்மோடு கைகோர்க்கலாம்” என்ற நீள் வாசகத்தை உரத்துக் கூறும் போதே இதன் அதிர்வு உசுப்பி விடுகிறது. ஒவ்வொரு பக்கங்களையும் வாசித்தலுக்கு உட்படுத்தும் போது 30 கவிதைகள் தலை நிமிர்கின்றன.

மிக ஆழமாய் உணர்வு ரீதியில் ஏற்றுக் கொள்ளும் போது பல விம்பங்கள் எமக்கு கிடைக்கின்றன. கருவளம் சிறிய அம்சத்தைக் கொண்டிருந்தாலும் தாங்கள் சொல்ல வரும் விடயத்தை முழுமைப் படுத்தியே இருக்கிறார்கள். ஆர்ப்பாட்டமில்லாத மொழித்திறன், கனத்த சொற்பின்னல் இல்லாத சித்தரிப்பு என்பவைகளால் பல கவிதைகள் இதற்கு அணி சேர்க்கின்றன. ஆனாலும் காதலைப் பற்றிய கரிசனையை யாரும் காட்டவில்லை. இருந்தும் இரண்டு தவிப்புகள் கவிதைகளுக்கு ஆடையாகி உள்ளன.

1. அ.ஂ.றினைப் பொருட்களை அல்லது உயிரினங்களோடு இணைத்துக் கவிபுனையும் தன்மை

02. சமூகம் அல்லது தாய்மை பற்றிய வலி

மேற்குறித்தவைகளை நோக்கும் போது ரசம் தட்டுவதைப் போல சில வரிகளைக் காணலாம்.

- நிந்தவூர் இலக்கியன் முர்ஷிதின் - சந்திரனுக்கும் சூரியனுக்கும் திருமணப் பேச்சு வார்த்தை.
- எஸ். ஜனூஸின் சிவப்பு மழை, கருப்பு மழை, மீன் மழை, மான் மழை, ஆமை மழை, பூனை மழை.
- பிரகாசக்கவி அன்வரின் - முதலை விழுங்கிய ஆடு ஒன்றின் பிழுக்கை கிளறி பகுப்பாய்வு நடக்கிறது.
- எம்.எஸ்.றஷ்மியாவின் நுளம்புகள் கடிக்குமென்று எங்கள் சேலையை குழந்தைகள் மீது போர்த்துவோம்.

இவ்வாறு நான் குறிப்பிட்ட தவிப்பு -01 ன் கருவும், தவிப்பு -02 ன் சமூகம் பற்றி நிந்தவூர் பாயிஸின் வியர்வைகளை விற்பனை செய்யும் ஏழையின் போராட்டத்தோடு பஞ்சு மெத்தைக் காரனுக்கு…ஜனதா லத்தீபின் பொல்லார்க்கும் பணமிருக்க புகழ்ச்சிவரும் பூமியிலே… இவ்வாறு, தாய்மை பற்றி சின்னப் பாலமுனை முஹா, எஸ் எல் அன்வர் ஆகியோரும் கோடிடுகின்றனர். தவிர நாட்டாரியல் பாணியில் அமைந்த அரங்கக் கவிதை, இவ்வகையான வகையறாக்களில் எழுத்துக்கள் வழிமறிப்புச் செய்கின்றன. இஸ்லாமிய வரம்பிற்குட்பட்ட அற்புதமான கவிதையினை கிராமத்தான் கலீபாவும், கலைமகள் ஹிதாயாவின் கவிதை அசை, சீர், சந்தம், நிறை மரபு ரீதியிலான மணத்தை ஓரளவு

நிரப்பியிருக்கிறார். ஒலுவில் சிபானி முஹமட், அஸீஸ் எம் பாயிஸ் ஆகியோரது கவிதைகள் நெடுங்கவிதைப் பாணியில் மண்வாசனை வீசும் அழகு தமிழில் பக்குவம் சேர்க்கிறது. குழந்தைக் கவிதைகளை அல்லது ஈசாப் கதைகளை முன்னிறுத்தி படிப்பினை தந்திருக்கிறார் அஸீஸ் எம் பாயிஸ்.

இறக்காமம் பர்சானா றியாஸின் கவிதையானது இந்த சஞ்சிகைக்கு கிடைத்த மற்றுமொரு நல்ல கவிதை. தான் ஒரு பாத்திரமாக மாறி நெடுங்கவிதை தந்திருக்கிறார். 60 களில் வெளிவந்த கவிஞர் நு.ஃமானின் ''தாத்தாமாரும் பேரர்களும்'' நெடுங்கவிதைகளுக்குப் பிறகு இப்போது அந்தப் புனைவு இன்று ஒரு சிலரிடமே களைகட்டுகிறது, நல்ல சகுனம்தான். பைசால், க.டனிஸ்கரனின் கவிதைகளில் சற்று மொழி நவீனம் உயிர்பெறுகிறது. அந்த மொழியினை மீள்வாசித்தலின் மூலம் ரசிப்புக் கொள்ளும்போது உயரப்பறக்கிறது கவிதைகள்.

வெலிகம ரிம்ஸா முஹம்மட் இன் வாழ்வியல் கசக்கும் என்ற கவிதை பெண்ணிலை வாதத்தை மெல்லியதாய் உணர்த்துகிறது. எச்.எப். றிஸ்னாவின் ''முதியோர் இல்லம்'' கவிதை மனிதாபிமானம் தெறிக்கும் நல்ல எழுத்துக்கள். ஜமால்தீன் ஸாஜஹான், முஹம்மட் இஸாட், இவர்கள் கவிதை கடும் பின்னிரவில் கிளம்பும் நிலவாய் பெறுமானப் படுகிறது. செம்மணலில் விழும் மழைத்தாரைகளால் மூக்கில் மணக்கும் நல்ல புழுதி மழைபோல றொஷான் ஏ.ஜிப்ரியின் மண்வாசனை மொழியினை நீண்ட காலத்திற்குப் பின் தந்திருக்கிறார். கவிஞர் ஜே வஹாப்தீன் ''மாயம் செய்தான்'' நேரிசை வெண்பா தந்திருக்கிறார். மஹாகவிக்குப் பிறகு குறும்பா, வெண்பாக்கள், ஹைக்கூ தந்தவர்களில் பாலமுனை பாறூக், எஸ் ஜலால்தீன், அஸீஸ் எம் பாயிஸ் வரிசையில் ஜே.வஹாப்தீனும் இந்த நேர்கோட்டில் பயணித்திருக்கிறார். இங்கு மரபின் வரம்பிற்குள் நின்று அநீதிகளை இப்படிச் சாடுகிறார்...வேலிப்பொதுச் சண்டை /நீதிமன்றத்தில் இன்றும் கேலியாய் போச்சு உலகு/மொத்தத்தில் இவைகள் கீறல்களல்ல எமது மனதுக்குள் உறைந்துபோகும் ரசனை வெடிப்புக்கள்.

# மரணத்தில் குரல்

ஒலுவில் எம் எச். ஹஸ்ரி முஹம்மத்



உலகம் உணர்ந்த
உண்மை நான்.
நிஜத்தை நோக்கிய பயணத்தின்
நுழைவாயில் ஆகிறேன்.

மானிடனே!
நீ கண்விழித்து உறங்குகிறாய்
உன்னை கண்மூட வைத்து
விழிக்கச் செய்ய
திறவு கோலாகிறேன்.

உலகை உள்ளத்தில் விழுங்கிய
உலகாயுத மூடர்கள் என்னை
கற்பனை என்கின்றனர்
நானொன்றும்
கருப்பொருளல்ல
கற்பனை கடந்த
இறையேற்பாடு நான்.

நீயுண்ணும்
ஒரு கவள உணவும்
களத்தை அடைவதும்
உறுதியில்லை
அதற்குள் நான்
வந்திடலாம்.

என்வருகையை
நீ அறியமாட்டாய்
எதற்காக உன் காலம் விற்று
என்னைக் கணிக்க கருவி
செய்கிறாய்?
கணித்து விடைகாண
நான் கணிதமல்ல.

இறுதித் தறுவாயில்
வேதனை தாங்காமல்
ஊசியின் காதில் ஒட்டகம்
நுழைவது
சாத்தியம் என எண்ணுவாய்.

ஈயின் இறக்கைக்கும்
ஒப்பாகாத பொய்யுலகில்
நிரந்தரம் என்பதுண்டா?
பொய்யுலகை மெய்யாக
எண்ணியதால்
அறிவிருந்தும் அறிவிலியாகின்றாய்
உயிரிருந்தும் ஜடமாகின்றாய்.

பலசாலி என்றெண்ணி
கனவுலகில் கரைந்து விட்டாய்
அதனால் என்னை மறந்துவிட்டாய்.

உன் கனவைக் கலைக்க
உடலை இயக்கமற்றதாக்க
உன் இருப்பிடம்
கருவறையானாலும்
உருக்கறையானாலும்
தேடி நான் வருவேன்
காத்திரு.

# நிராகரிப்பிற்கான ஒற்றைச் சொல்

அஸீஸ் எம் பாயிஸ்

நிராகரிப்பிற்கான
அந்த சொல்
மரியானாவின்
இருள்படர்ந்த
ஆழத்தில் ஓடும் நதியில்
நீந்திக் கொண்டிருந்தது.



அது
அதுவாக வந்து
உன் இரையில்லாத
தூண்டில் கொக்கியில்
அகப்பட்டிருக்க வேண்டும்



இல்லையேல்
காரிருளில்
கறுப்புக்கல்லில் ஊரும்
கட்டெறும்பைக்
கண்டு கொள்ளும்
உன் விழித்திரைகள்
அதனைப் படம்
பிடித்திருக்கக்கூடும்

திராட்சையில்
குத்தப்பட்ட ஊசியாய்
வலிதெரியாமல்
நெஞ்சில் பதித்துச் சென்றாய்
அந்தச் சொல்லை

வலி தெரியாமல்
பதிக்கப்பட்ட
சொல்லில்
சிலுவையில் அறையப்பட்ட
ரணம் இருப்பதாக பேசிக்
கொண்டார்கள்.

ரணமறியாதபடி
புன்னகைத்துக் கொண்டுதான்
மார்பில் பதித்தாய்
அந்தச் சொல்லை

நிராகரிப்புக்கான
அந்தச் சொல்
வெறுப்புக்குரியதெனினும்
பச்சைக் காயத்தில்
மயிலிறகு தடவும்போதான
சுகமாய் இருக்கலாம்

சொல்லைப்
பதித்துவிட்ட
களிப்பில் பால்வெளியெங்கும்
உன் வால் நட்சத்திரம்
நீண்டு கிடக்கிறது

உன் நீண்ட வால்களின்
துகள்களை உறுஞ்சிக் கொள்ளும்
கருந்துளையாக
பின் தொடர்கிறதென் உறவு.

# புது யுகம் படைப்போம்

ஒலுவில் அப்துல் நழீம்



ஆசைகள் பூட்டக்கண்டேன்
ஆர்வங்கள்
குலையக் கண்டேன்
அழகிய வானமெங்கும்
அருவருப்பு நிறங்கள் கண்டேன்..!

வறுமை கொண்டு
வாடக்கண்டேன்-சிலர்
வாரிவழங்கும் திறமை கண்டேன்
வல்லோன் இறை அன்பு வேண்டி
வாய் மொழிந்து பேசக்கண்டேன்..!

சுற்றிவர பூமி கண்டேன்
சுத்தமான சுவாசம் கண்டேன்
சந்திரனும் சூரியனும்
சளைக்காத உதயம் கண்டேன்..!

வெற்றி பெற கனவு கண்டேன்
வீரச் சமூகம் என்றே நின்றேன்
சத்மில்லா யுத்தம் போக்கி
சாதனைகள் படைக்க கண்டேன்..!

சத்தமில்லா யுத்தம் கண்டேன்
செத்துமடியும் உடல்கள்
கண்டேன்
சித்தமில்லா வாழ்வு கொண்டு
அச்சங்கொண்டு
வாழக்கண்டேன்..!

பகலெல்லாம்
இரவாய்க்கண்டேன்
படைத்தவன்
கைவரிசையென்றேன்
இடுக்கனும் தடம்பதித்து-
உலகு
ஏக்கங்கொண்டு
வாழக்கண்டேன்..!

# எங்கிருந்தும் தொடங்க முடியாத தெரு...!

ரோஷான் ஏ. ஜிப்ரி



யாரோ ஒருத்தி
வாசலைக் கூட்டி வந்து
வீதிக்கு விட்டிருந்தாள்
புதினம் பார்க்க.

இப் பக்கம் யாராவது
தெரிந்தோ தெரியாமலோ
வயசுக்கு வந்திருக்க வேண்டும்
பொதிசெய்யாமல்
துவட்டப் பட்டு கிடக்கின்ற
"நப்கீன்"கள் சாட்சிக்கு ஏதுவாக.

அழகாய் இருந்த சுவர்களின்
அசிங்கத்தில் தெரிகிறது
கோதுமை கரைசலுடன்
கட்சிப் "போஸ்ட்டர்கள்" ஒட்ட
இருவேறு கூட்டம்
ஒன்றின் மேல் ஒன்றை ஒட்டியபடி
இவ்வழி கடந்திருக்கின்றன என்று.

பிச்சைக்காரன் மட்டுமல்ல
பஸ்ஸை தவறவிட்ட பயணியும் கூட
படுத்துறங்கி பசியாறும் மடமான
நிழல் வாகை நிழலில்
சிற்றெறும்பின் யோசனையேனும்
தோன்றாத ஒரு"பரதேசி"
சிறுநீர் கழித்திருக்கிறான்.

நேர் கோட்டில் வந்த ஊர்தியை
குறுக்குக் கோட்டில் வைத்து
விசாரணை செய்து
கொண்டிருந்தார்கள்
அவர்களுக்கான வசூல் வந்து சேரும்
வரை.
போக்கு வரத்தில் என்னிடமும்
உங்களிடமும்
கறந்த,தெரிந்த சில.. புள்ளிகள்.

இத்தெருவில்
வெற்று மதுக் குப்பிகள்
வீசிக் கிடப்பது காண்கையில்
ஊகிக்க முடிகிறது
தறி கெட்டலையும் தவறணை
பிசாசுகள்
புகைந்தபடி நிலத்தில் கால்
பட்டும்,படாமலும்-சற்றுமுன்
காற்றையும் மாசு படுத்தி
கடந்திருக்க வேண்டும் என..

வெற்றிலை,பாக்கு சாப்பிட்ட
சில... சுண்ணாம்புகள்
பொறம்போக்கு இடம் என்ற போக்கில்
காவி படிந்த பற்களை கழற்றி விட்டு
போயிருந்தார்கள்.

சுத்தப் படுத்துவதாயின்
எங்கிருந்து தொடங்குவது
என்ற கேள்வியுடன்
முற்றுப் பெறுகிறது தெரு!

# பூமிப் பெண்

மருதமுனை எம் எம் நௌபல்

காற்றைப் போர்வையாக்கி
பச்சை மரங்களால் ஆடையுடுத்தி
கொடிகளால் அணிசெய்து
மடிக்குள் என்னை அமர்த்தி
பூங்காற்றை அணைத்தவளாய்
சுற்றிவருகிறாள்.

நதிகளால் வகுடெடுத்து
பனிக்காற்றால் மூச்சு விட்டு
குளிரோடைகளால் அலங்கரித்து
அமைதியாக சுற்றுகிறாள்.

என் நாட்குறிப்புக்கு
விருந்து படைத்து
இரவு பகலை
தன்னுள் தோன்ற வைத்து
அசைகின்றாள் அவள்.

சூரியனை தன்னில்
தெறிக்க வைத்து
சந்திர ஒளியினால் நீராட்டி
மின்னல் கோலம் போட்டு
மானுடத்தின் விடியலுக்காய்
சுற்றிவருகிறாள் பூமிப்பெண்.



# பெண்

ஒலுவில் மாஹிர்

தத்துவங்களை
தத்தெடுக்கின்ற தவம்

மனசு தொட்டதையும்
உள்ளம் நொந்ததையும்
சொல்லியழுகின்ற
நல்ல இலக்கியம்

அடிமைத் தனத்திலும்
ஆட்கொள்ளப்படும் பணியாள்

சிலரின் மிருகத்தனத்திலும்
சருகாய்
கருகும் மலர் மொட்டுக்கள்

தூய அன்பை
மாய வலையாக்கி
அன்பினால் இறுக்கி
அனைத்தையும்ஆள்பவள்
பெண்



# நாளைய கோஷம்

மருதமுனை விஜிலி

தலைகள் தடவி
கண்கள் பிடுங்குவதான
பிரயத்தனமாய்
இனி அவர்கள் வருகை

எங்கள் இதயத்தில்
பாதம்வைத்து
தோளோடு அரவணைத்து
நெஞ்சுக்குள் உறவு கொள்வர்

கடவாய்ப்பறகள் மின்னிட
உதிர்த்தும் புன்னகைக்குள்
“புள்ளடி” ஐ சொந்தமாக்குவர்

மூன்று வேளையென்ன
நாலு பொழுதுக்கும்
வயிற்றுப் பசி போக்குவதாய்
முழங்குவர் மேடையில்

மனங்கள் வெள்ளையாய்
இருக்காது - ஆனால்
பலவர்ணங்களால் அலங்கரிப்பர்
உடம்பெல்லாம்

பேசுவதில் கஞ்சத்தனம்
ஆனால்
தெருக்களில் மஹாத்மாக்கள்

இருட்டுக்குள் பல ரகசியங்கள்
பல்லாக்கில் பவனி வரும்
விழுந்தால் பறக்கும் காற்றில்

“இரத்த உறவு” என்றபடியே
அரங்கேறும் பல நாடகங்கள்

ஆகாயத்தை பிடித்துத் தருவதாய்
ஆசைகளை விதைப்பர்
ஈற்றில் காணமால் போவர்
மண்ணைவிட்டும்

இப்படித்தான்
இந்த அரசியல் சதுரங்கத்தில்
நாளை பல கோஷங்கள்
முழங்கும்
நாங்கள் மட்டும்
அலைமோதுவோம்
பந்துகளாய்.